**துருசவிய நிதியம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

துருசவிய நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல்.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1. இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| குறித்த நியமங்களுடனான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தால் கிரயம் ரூபா 1,610,331 ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டுள்ளதுடன் ஆனால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு | உடன்படுகின்றேன். எதிர் காலத்தில் சனாதிபதியின் செயலாளர் அலுவலகத்திலிருந்து பெறப்படுகின்ற வாகனங்களின் கணிப்பீடு மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்திலேயே இப் பணியைச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க முழுமையாகத் தேய்மானமிடப்பட்டு முடிக்கப்பட்டுள்ள இறுதிச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் கருத்திற் கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்களில் எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

வருகின்றது. அதன் பிரகாரம் ஏற்பட்டுள்ள மதிப்பீட்டு வழு இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்திற்காக மீளாய்வாண்டில் சனாதிபதி அலுவலகத்திலிருந்து கிடைக்கப் பெற்ற மொத்தப் பெறுமதி ரூபா 22,600,000 ஆன 07 வாகனங்கள் சட்டரீதயாக கையேற்கப்பட்டு எடுத்துக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இவ் வாகனங்கள் இற்றை வரை ஒரு ஆவணத்தில் மட்டுமே வழங்கப்பட்டிருந்ததுடன் வாகனத்தின் அனுமதிப்பத்திரம் நிறுவனத்திற்கு கையளிக்கப்படாமையால் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிராததுடன், வேறாக நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பெறுமதி குறிப்பிடப்படாமல் பராமரிக்கப்பட்டு வருகின்றது. | வாகனங்கள் சட்டரீதியாக கையேற்கப்பட்டு கணக்கில் எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதியத்திற்கு நன்கொடையாக 2018 ஆம் வருடத்தில் பெருந்தோட்ட அமைச்சிலிருந்து பெறப்பட்ட 89 தளபாட உபகரணங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. | உடன்படுகின்றேன். எதிர் காலத்தில் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நன்கொடைச் சொத்துக்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி மற்றும் கம்பஹா ஆகிய 04 மாவட்டங்களில் 30 துருசவிய சங்கங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் | மிகுதி நிலுவையைப் பெற்றுக்கொள்வதற்கு நீதிமன்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கும் / அல்லது | கடனை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் கடன் தொகையில் ரூபா 826,109 ஆன பெறவேண்டிய பகுதியொன்று 05 வருட காலமாகக் காணப்படுவதுடன் அறவிடப்படாது காணப்பட்டது. அத்துடன் சங்கங்கள் மீளாய்வாண்டு வரையில் செயற்பாட்டில் இருந்தனவா என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மிகுதியைப் பதிவளிப்பதற்கு நிர்வாக சபைக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஆ) | நிதியத்தினால் முன்னைய வருடத்தில் 02 துருசவிய சங்கங்களுக்கு ரூபா 500,000 வீதம் 06 மாதங்களில் செலுத்தப்படுகின்ற அடிப்படையில் நூற்றுக்கு 4 வீதமான வட்டிக்கு வழங்கப்பட்ட ரூபா 1,000,000 ஆன கடன் 6 மாத காலப்பகுதியில் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் இன்னும் அறவிடப்பட வேண்டிய ரூபா 300,000 ஆன கடன் தொகைக்காக வட்டி மற்றும் தண்டப்பணம் என்பவற்றை கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உடன்படுகின்றேன். எதிர்காலத்தில் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | விரைவில் கடன் அறவிடப்படல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2008 மார்ச் 03 ஆந் திகதிய 1/2008 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கை | அரச வங்கிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் முதிர்ச்சியடைகின்ற போது இடைக்கால முதலீடுகளிற்காக இலங்கை மத்திய வங்கி மற்றும் திறைசேரியினால் செலுத்தப்படும் வட்டி வீதத்திற்கு உட்பட்டு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட | உடன்படுகின்றேன். எதிர்காலத்தில் இலாபகரமான முதலீடுகளில் முதலீடுகள் செய்யப்படும். | திறைசேரியால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணம் முதலீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காலப்பகுதிகளிற்கு வங்கி வைப்புக்களில் அல்லது திறைசேரி பிணை முறிகளில் மீள் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2017 ஆம் வருடத்திலிருந்து 06 மாத குறுகிய வைப்புக்களில் அரச வங்கிகளில் அரச வங்கிகளில் முதலீடுகள் செய்யப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் முதலீடுகளின் தொகை ரூபா 9,201,073 ஆகும். | | |
| (ஆ) | 2000 இன் 23 ஆம் இலக்க துருசவிய நிதிய அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (அ),(ஆ), (இ) மற்றும் (ஈ) | பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | நிதியத்தின் நோக்கங்களை அடைவதற்காக பல பயனுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் சிறு இறப்பர் உரிமையாளர்களின் கோரிக்கையின் பேரில் செயற்படுத்துவதற்கு நடடிவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு மீளாய்வு ரூபா 3,222,288 ஆன மிகை என்பதுடன் அதற்கொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 2,469,974 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 752,314 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு செலவுகள் குறைவடைந்தமையே பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 03 மாவட்டங்களில் பயிற்சிகள் நடாத்தப்படாமையுடன் அப்பயிற்சிகளில் பங்குபற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள இறப்பர் பால் வெட்டும் தொழிலாளார்களுக்கு வழங்கப்படுவதற்காகக் கொள்வனவு | 03 பயிற்சி திட்டங்களுக்கான பயிற்சி பெறுபவர்களுக்கு நன்கொடையாக வழங்குவதற்கு முன்மொழியப்பட்ட கருவிகள் அவ்வாறு மிகுதியாக உள்ளன. எவ்வாறாயினும், மேற்படி குறிப்பிடப்பட்டுள்ளபடி | திட்டமிடப்பட்டபடி பயிற்சிக் கற்கை நெறிகளை நடாத்தி பயிற்சி உபகரணங்கள் முறையாகப் பங்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த ரூபா 1,719,984 பெறுமதியான மின் விளக்குகள், உபகரணப் பைகள், ரீசேர்ட் மற்றும் சிறு கருவிகள் போன்றன 10 வருடங்களாக 2021 மே மாதம் வரையில் பயன்படுத்தப்படாது களஞ்சியசாலையில் காணப்பட்டன. | 2021 ஆம் வருடத்தில் மீதமாகவுள்ள எண்ணிக்கையிலான கருவிகள் பயிற்சி பெறும் பயனாளிகளுக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் நிலைமையை மேம்படுத்தும் நோக்குடன் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் 14 மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட துருசவிய சங்கங்களில் எண்ணிக்கை 815 ஆக இருந்ததுடன் இச் சங்கங்களில் செயலற்ற நிலையில் காணப்படுகின்ற சங்கங்கள் இற்றை வரை இணங்காணப்படவில்லை. | விரைவில் சங்கங்களை வகைப்படுத்துவதை விரிவுபடுத்தி இதைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயலற்ற சங்கங்கள் இணங்காணப்படல் வேண்டும். |
| (இ) | 2011 ஆம் வருடத்திலிருந்து 2016 ஆம் வருடம் வரை மொனராகலை மாவட்டத்தில் சிறு தோட்டத் தொழில் முயற்சியாளர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட 130 கிராமிய இறப்பர் மன்றங்கள் மற்றும் 31 ஒன்றினைந்த பதப்படுத்தும் மத்திய நிலையங்கள் செயற்திறனுடன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு துருசவியவிற்கு பொறுப்பேற்குமாறு பணிக்கப்பட்டுள்ள போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | துருசவிய நிதியச் சட்டத்தின் பிரகாரம் அந்த மன்றங்களையும் ஒன்றிணைந்த பதப்படுத்தும் மத்திய நிலையங்களையும் விரைவில் நிதியத்திற்கு பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்பதை தெரிவிக்கின்றேன். | பொறுப்பேற்றல் தாமதமின்றி மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய கட்டிடம், பொறி மற்றும் உபகரணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2005 ஆம் வருடத்தில் அருப்பொல மற்றும் 2008 ஆம் வருடத்தில் கனேபல்ல இறப்பர் சீட் ஒன்றினைந்த பதப்படுத்தும் மத்திய நிலையங்கள் 02 இன் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 1,000,184 ஆனது செலவிடப்பட்டிருந்தது. எனினும், ஒன்றினைந்த மத்திய நிலையம் இரண்டினதும் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு 15 வருடங்களுக்கும் அதிக காலம் கடந்து விட்ட போதிலும் நிர்மாண வேலைகள் முடிக்கப்படவில்லை. | குறிப்பிட்ட ஒன்றினைந்த பதப்படுத்தும் மத்திய நிலையங்களின் நடவடிக்கைகளுக்காக துருசவிய நிதியத்தினால் ஒதுக்கப்பட்டிருந்த தொகைக்குப் போதியளவில் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதன் ஒப்பந்தத்தின் பிரகாரம் சங்கத்தின் பங்களிப்புத் தொடர்பாக செய்ய வேண்டிய நிலுவைப் பணிகள் இன்னும் செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நிலுவைப் பணிகள் அவரவர் செலவில் செய்யப்படுவதற்கு கூறப்பட்டுள்ளது. | நிர்மாணப் பணிகள் விரைவில் முடிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் சனாதிபதிச் செயலகத்தின் நிதியிலிருந்து பெறப்பட்ட ரூபா 2,000,000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்று ஓட்டிச் செல்ல முடியாமல் சுற்றுச் சூழலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இவ் வாகனத்தைப் பழுதுபார்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வாகனம் பழுது பார்க்கப்படல் வேண்டும். |